Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 123 | வியாழக்கிழமை Thursday | 05.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில்

# 14 விளையாட்டுத்துறை கட்டிடங்களை முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள்பங்குகொண்டு வெற்றிபெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

செங்கல்பட்டில் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 3 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் அகாடமிகள், நாமக்கல் மாவட்டம் – சேந்தமங்கலம், சேலம் மாவட்டம் – ஆத்தூர் மற்றும் மேட்டூர், செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள்; தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கங்கள், சென்னை, முகப்பேரில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட விளையாட்டு வளாகம், கோயம்புத்தூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 4 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பார்வையாளர் மாடம்;

சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம்,

நாமக்கல் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம் மற்றும் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம்; என மொத்தம் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்;

கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 14 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை, சென்னை, வேளச்சேரி AGB வளாகத்தில் 16 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் தரத்தில் நீச்சல் மற்றும் டைவிங் குளம் புதுப்பிக்கும் மற்றும் மேம்படுத்தும் பணி, சென்னையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாய்மரப் படகுப் பயிற்சி அகாடமி மற்றும் பாய்மரப் படகுப் போட்டிக்கான சிறப்பு மையம்; என மொத்தம் 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.விற்கு ஒரு ராஜ்யசபா சீட்



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ள தே.மு.தி.க.விற்கு ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்கப்பட்டு அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக சட்டமன்றத் தேர்தல் தேதி இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்பட வாய்ப்புள்ள நிலையில் தி.மு.க தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தியுள்ளது. இதன் ஒருபகுதியாக அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தி.மு.க – தே.மு.தி.க இடையே ஒரு மாநிலங்களவை இடத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. தே.மு.தி.க சார்பில் அக்கட்சியின் பொருளாளர் எல்.கே. சுதீஷ் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

2005–ல் கட்சி தொடங்கப்பட்ட பிறகு, தே.மு.தி.க முதல்முறையாகத் தற்போது தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளது. கடந்த காலங்களில் அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தியும், மாநிலங்களவை சீட் விவகாரத்தில் உடன்பாடு எட்டப்படாததால் தி.மு.க பக்கம் தே.மு.தி.க. நகர்ந்ததாகக் கூறப்படுகிறது. பிப்.19 அன்று தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து கூட்டணியை உறுதி செய்திருந்தார். தொண்டர்களின் விருப்பப்படியும், மறைந்த தலைவர் விஜயகாந்தின் விருப்பத்தை நிறைவேற்றவும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மகள் நிச்சயதார்த்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் மற்றும் தே.மு.தி.க பொருளாளர் எல்.கே. சுதீஷ் ஆகியோர் பங்கேற்றனர். விழா முடிந்ததும் அங்கிருந்து நேரடியாக இருவரும் அண்ணா அறிவாலயம் வந்தடைந்தனர். அங்கு நடைபெற்ற ஆலோசனையில், தே.மு.தி.க கோரியிருந்த ஒரு மாநிலங்களவை இடத்தை தி.மு.க ஒதுக்கியது. ஒப்பந்தம் கையெழுத்தான பின் செய்தியாளர்களிடம் பேசிய எல்.கே. சுதீஷ்,

தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான வேட்பாளரை பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் விரைவில் அறிவிப்பார். தொடர்ந்து வேட்புமனு தாக்கல் செய்யப்படும். சட்டமன்றத் தொகுதிகள் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறும் எனத் தெரிவித்தார்.

தி.மு.க.வின் தொகுதி பங்கீட்டு குழு டி.ஆர். பாலு தலைமையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. இதில் காங்கிரஸ் தரப்பில் ஆரம்பத்தில் அதிருப்தி நிலவிய நிலையில், இன்று ப. சிதம்பரம், செல்வப்பெருந்தகை ஆகியோர் முதலமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளனர். தே.மு.தி.க.விற்கு இரட்டை இலக்க எண்ணிக்கையிலான சட்டமன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இதன் மூலம் தே.மு.தி.க தனது அரசியல் வரலாற்றில் முதல்முறையாக மாநிலங்களவையில் காலடி எடுத்து வைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பயிர்க் கடன் தள்ளுபடி, கல்விச் செலவு...

# த.வெ.க. தலைவர் விஜய்யின் தேர்தல் வாக்குறுதிகள்!



5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் பயிர்க் கடன் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தவெக தலைவர் விஜய் கூறியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய விஜய் 2–ம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டுள்ளார். முன்னதாக வேலூரில் அவர் முதல் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார்.

அதன்படி 2–ம் கட்ட வாக்குறுதிகளாக அவர் அறிவித்தது, "நம் ஆட்சி அமைந்ததும் டெல்டா விவசாயிகளுக்கு உரத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வோம்.

5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் முழுமையாக ரத்து செய்வதற்கும் 5 ஏக்கருக்கு அதிகமாக வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க் கடனை 50% வரை ரத்து செய்வது குறித்து சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம்.

திமுக போல பாகுபாடு காட்டாமல் அனைவருக்கும் வெளிப்படையாகச் சொல்வோம்.

2 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்கள் குடும்பத்தில் யாரும் மாநில, மத்திய அரசு ஊழியராக இல்லாமல் இருக்கும்பட்சத்தில் அவர்களுடைய குழந்தைகளின் மருத்துவம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப கல்வி முதல் அனைத்து வகை படிப்புகளுக்குமான முழு செலவையும் அரசே ஏற்கும்.

விவசாயிகளுக்கு எதிரான எந்த திட்டங்களும் கொண்டுவரப்படாது, மத்திய அரசின் அழுத்தம் இருந்தாலும் தவெக அதனை முழுமையாக நிராகரிக்கும். எப்போதும் விவசாயிகளின் பக்கமே தவெக நிற்கும். கொள்முதல் நிலையங்களில் நெல்மூட்டைகள் பாதுகாக்கப்படும். நெல் முளைத்து வீணாவதை நம்முடைய அரசு பார்த்துக்கொண்டு இருக்காது.

போதுமான கொள்முதல் நிலைய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்வதற்கோ நெல்மூட்டைகள் ஏற்றி இறக்குவதற்கோ ஒரு பைசா கமிஷன் வாங்காமல் பார்த்துக்கொள்ளப்படும். கமிஷன் வாங்கினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை என்ற வரையறை நிர்ணயிக்கப்படும். கிராமங்களிலும் எடையாளர் நியமிக்கப்படுவார். பெண் விற்பனையாளருக்கு பெண் எடையாளர், ஆண் விற்பனையாளருக்கு ஆண் எடையாளர் என்பது பின்பற்றப்படும். ரேஷன் கடைகளில் அரிசி தவிர அனைத்துப் பொருள்களும் பாக்கெட் செய்து விநியோகிக்கப்படும்.

மீனவர்களுக்கு மத்திய அரசு சட்டப்படி பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு தவெக உண்மையான அழுத்தம் கொடுக்கும்.

கல்வி, மருத்துவம், ரேஷன், குடிநீர் சாலை பேருந்து வசதி என அடிப்படை விஷயங்களுக்கு நம் அரசு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி தனியார் வேலைவாய்ப்புகளுக்கான உத்தரவாதமும் உருவாக்கப்படும்" என்றார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட எஸ்.எல்.டி.பா. சச்சிதானந்தம் விருப்பமனு அளித்தார். முன்னதாக, தமிழக அமைச்சர் சு.முத்துசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின் போது ஈரோடு எம்.பி. பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ் எம்.பி. மற்றும் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.



2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட திமுகவினரிடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர்ஜெ.திருவாசகம்,100க்கும்மேற்பட்டஇளைஞரணியினருடன் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தனது விருப்பமனுவைத் தாக்கல் செய்தார். கட்சிப் பணிகளில் நீண்ட அனுபவம் கொண்ட இவர், தொகுதி மக்களின் பேராதரவுடன் களம் காணத் தயாராகி வருவதால், இந்த எழுச்சிமிகு விருப்பமனுத் தாக்கல் ஈரோடு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும், திமுக இணை கொள்கை பரப்பு செயலாளருமான வி.சி.சந்திரகுமார், மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட சென்னையில் உள்ள திமுக அலுவலகத்தில் விருப்பமனு தாக்கல் செய்தார். தமிழக வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் இந்த மனு அளிக்கப்பட்டது.

# தாயன்புடன் எங்களை அரவணைத்து கழகத்தில் இணைத்துக்கொண்டவர் முதலமைச்சர் ஸ்டாலின்

## மதுரையில் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி



அதிமுக முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததை முன்னிட்டு இணைப்பு விழா மதுரை திருமங்கலம் ராயபாளையம் பகுதியில் சுமார் 50 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு இணைப்பு விழா நிகழ்ச்சி வருகிற ஏழாம் தேதி நடைபெற உள்ளது. இதில்தமிழகமுதல்வர்மு க ஸ்டாலின் கலந்து கொள்கிறார் அவரது முன்னிலையில் ஓபிஎஸ் அவர்களின் ஆதரவாளர்கள் சுமார் 50,000 பேர் இந்த நிகழ்ச்சியில் தங்களை திமுகவில் இணைத்துக்கொள்ள உள்ளனர். இந்த நிகழ்ச்சிக்கான முகூர்த்த கால் நடும் பனி தற்போது ஓபிஎஸ், அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், ஓபி ரவீந்திரநாத் ஓபிஎஸ் ஆதரவாளர் ஐயப்பன் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கான முகூர்த்தக்கால் நடப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஓ பன்னீர்செல்வம் கூறும் போது:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி முதலமைச்சர் அவர்களின் தலைமையேற்று பல்வேறு இயக்கங்களில் இருந்து கழகத்தில் இணைகின்றநல்லநிகழ்வு வருகிறஏழாம்தேதிநடைபெற உள்ளது அந்த நிகழ்வின் முன்னேற்பாடாக பூமி பூஜை போட்டு நிகழ்வை தொடங்கியுள்ளோம். இந்த நல்ல நிகழ்வில் எங்களை எல்லாம் அரவணைத்து செல்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார் என்பதை தாயன்புடன் எங்களை அரவணைத்து கழகத்தில் இணைத்துக் கொண்ட முதலமைச்சருக்கு நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த தேர்தலிலும் முதலமைச்சர் தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றி பெறும். சாதனை புரிந்த ஆட்சி மீண்டும் வரவேண்டும் தங்களுடையவிருப்பத்தை தெரிவித்துள்ளார்கள் என்ற நிலை உருவாகியுள்ளது.அதிமுகதொண்டர்கள் 70, 80 சதவீதம் மேல் திமுகவில் இணைகிற நல்ல சூழல் உள்ளது. தளபதி ஆட்சியின் திறன் அனைத்து தரப்பட்ட மக்களை அரவணைத்து செல்கின்ற அவருடைய தலைமை ஏற்று மனப்பூர்வமாக இதயபூர்வமாக இணைகின்ற நிகழ்ச்சி தான் இது.

அதிமுகவில் பதவி சுகத்தை அனுபவித்து விட்டு திமுகவில் இணைந்து அம்மாவுக்கு துரோகம் செய்துவிட்டார் ஓபிஎஸ் அண்ணா அதிமுகவினர் குற்றச்சாட்டு குறித்தகேள்விக்கு:அவர்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லை

திருமங்கலத்தை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் குறித்த கேள்விக்கு:

எந்த ஒரு மகிழ்ச்சி நடந்தாலும் திரு திருமங்கலம் இயற்கையான பெயரை எங்களுக்கு அமைந்திருக்கிறது. கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று நிறைவு பெறும் அதேபோல முதலமைச்சர் மீண்டும் முதல்வராக வருவார்.

முன்னதாக செய்தியாளர்களை சந்திக்கநாற்காலிகளில்எல்லாம்அமர்ந்த போது ஓபிஎஸ் அவர்கள் அமைச்சர் மூர்த்தியை பார்த்து நீங்கள் பேசுங்கள் என்றார் அதற்கு மூர்த்தி நீங்கள் பேசுங்கள் என்று ஒருவரை ஒருவர் மாறி மாறிசொல்லிக்கொண்டனர்.



சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் நடத்திய மாபெரும் மதிப்புறு முனைவர் பட்டம் அளிப்பு விழா மிகச்சிறப்பாக சென்னையில் மயிலாப்பூர், தெற்கு மாட வீதியில் உள்ள ஹோட்டல் கற்பகம் இண்டர்நேசனல் கலையரங்கத்தில் உயர்நீதிமன்றத்தில் சிறப்பு வாய்ந்த மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் நீதியரசர் வெங்கடேசன் மற்றும் அவரது துணைவியாரோடு மற்றும் கலைமாமணி டாக்டர் அம்பிகா 150க்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்தியவர்களை அடையாளம் கண்டு அவர்களின் ஒவ்வொருசாதனைகள்பற்றியஆய்வுசட்டநிபுணர்கள்குழுவினால்தேர்ந்தெடுக்கப்பட்டு டாக்டர் சட்ட ஆலோசகர் மற்றும் மனித உரிமைகள் வழக்கறிஞர் துணைவேந்தர் J. மணிகண்ட ராஜா முன்னிலையில் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கொற்றவை நாகராஜன் ,முக்கிய பிரமுகர்களுடன் ஈரோடு பேராசிரியர் கோ.தங்கவேல் அவர்களுக்கு கல்வியியல் முனைவர்" எனும் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

# பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தூத்துக்குடியில் 3 நாள் கருத்தரங்கு விழாவை ஆட்சியர் இளம்பகவத் துவக்கி வைத்தார்




தூத்துக்குடி அன்னம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் "பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றம்" தொடர்பான 3 நாள் கருத்தரங்கம்இன்றுதொடங்கியது.

மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், குத்துவிளக்கேற்றி கருத்தரங்கினைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றி பேசுகையில், "சட்டங்கள் பல இருந்தாலும், அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் அரசு அலுவலர்களுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் அல்லது குழந்தைகள் அணுகும் போது,அவர்களை அன்புடன்கையாண்டுமுறையான வழிகாட்டுதல்களை வழங்கவேண்டும்.

அரசு அலுவலர்களுக்கு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், சட்ட முறையிலான தீர்வுகள் மற்றும் ஒரு குற்றம் நிகழும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் (POSH Act), வரதட்சணைத் தடுப்புச் சட்டம் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்புச் சட்டம் குறித்து விளக்கப்படுகிறது.

இரண்டாம் நாள் குழந்தை திருமண தடுப்புச் சட்டம், போக்சோ (POCSO) சட்டம் மற்றும் அரசு செயல்படுத்தும் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மூன்றாம் நாள் கற்றவற்றை கள ஆய்வு மூலம்செயல்படுத்துதல், நிதிமேலாண்மைகுறித்த விழிப்புணர்வு, பெண் தொழில்முனைவோரின் வெற்றிக் கதைகள் மற்றும் மருத்துவக் கருக்கலைப்புச் சட்டம்(MTP Act) குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் பிரேமலதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு) வ.கி. தீபு,மாவட்டகுழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அனுசியா, கல்லூரி முதல்வர் ஜாய்சிலின் ஷர்மிளா, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் நிவேதிதா மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மேற்கு வட்டம் பெத்தானியாபுரம். குருதியேட்டர் எதிரில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான உழைப்பாளர் நலக்கூடத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார். மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் அவர்கள் உடன் உள்ளார்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனிடம் பறையர் பேரியக்கத்தின் தலைவர் சே.சிவகுரு பறையனார் வேண்டுகோள்



இது தொடர்பாக பறையர் பேரியக்கம் தலைவர் சிவகுரு பறையனார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இஸ்ரேல் –ஈரான் போர் பதற்றத்தை காரணம் காட்டி சமுதாயத்திற்கு பயனளிக்காத ஆர்ப்பாட்டத்தை இனி வரும் நாட்களில் அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இஸ்ரேல்–ஈரான் இடையே உருவாகியுள்ள இராணுவ பதற்றமும் போர் சூழலும் சர்வதேச அளவில் மிகுந்த கவலைக்குரிய ஒன்றாக உருவெடுத்துள்ளது.

இந்த மோதல் உலக அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

அணு ஆயுத அச்சம், பிராந்திய ஆதிக்கப் போட்டி, உலக நாடுகளின் பாதுகாப்பு போன்ற பல சிக்கலான பரிமாணங்களை உள்ளடக்கியது இந்த பிரச்சினை

உலகத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் தீவிரமாக கவனித்து வரும் ஒன்றாகவும் இருக்கிறது.

இந்த சூழலில், அந்த சர்வதேச போர் பதற்றத்தின் உணர்வை தமிழ்நாட்டில் பொருளாதாரத்திலும் சமூக அந்தஸ்திலும்

பின் தங்கிய நிலையில் உள்ள மக்களின் அரசியல் மேடையாக தாங்கள் மாற்றும் இந்த முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலையுடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

ஒரு புறம் சமூக நீதி,சமத்துவம்,பட்டியல் இன மக்களின் உரிமை, அரசியல் அதிகாரமடைதல் போன்ற உயரிய நோக்கங்களை மக்கள் தங்களிடம் எதிர்பார்த்து தங்கள் பின்னால் நிற்கும் நிலையில் தாங்களும் அதையே இலக்காக வைத்து இயங்குவதாக மேடையில் முழங்கி வருகிறீர்கள்.

மறுபுறம் சமுதாய மக்களுக்கு சிறிதளவும் பயனளிக்காத இதுபோன்ற பிரச்சனைகளை அதுவும் கண்ணுக்கு தெரியாத

ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தில் நடைபெறும் உலகப் போர் பதற்றத்தை உள்ளூர் அரசியல் கோஷங்களாக தாங்கள் மாற்றுவது நியாயமா ? என்ற கேள்வி எழுகிறது.

தமிழ்நாடு பல மதங்களும் பல சமூகங்களும் இணைந்து வாழும் ஒற்றுமையின் அடையாளம்.

வெளிநாட்டு மத–அரசியல் மோதலை உள்ளூர் உணர்ச்சி அரசியலாகமாற்றுவது,சமூகநல்லிணக்கத்தையும் அமைதியையும் கேள்விக்குட் படுத்தும் அபாயம் கொண்டது.

தாங்கள் போராட்ட அறிவிப்பை விடுத்து அப்பாவி மக்களின் உயிரிழப்பை கண்டிப்பதோடு

இரு நாடுகளும் அமைதிக்கான வேண்டுகோளை வைக்க வேண்டும்.

பட்டியல் இன மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு, நில உரிமை, பாதுகாப்பு, அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற உடனடி மற்றும் அடிப்படை தேவைகள் இன்னும் முழுமையாக நிறைவேறாத நிலையில்,

சர்வதேசபோரைசமூகமக்களிடம்முன்னிறுத்தும் இந்தஅரசியல்,பட்டியல்சமூகமக்களின் ஆக்கப்பூர்வமான அரசியல் உரிமைகளை திசைதிருப்புவதாகவே இருக்கிறது.

பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் எடுத்துச் சென்ற அரசியல் மரபு அறிவியல் சிந்தனை, சட்டபூர்வ உரிமை, அவர் கட்டமைத்த அரசியல் இதுபோன்ற உணர்ச்சி மற்றும் கிளர்ச்சியை அடிப்படையாக கொண்டது இல்லை,

அறிவு சார்ந்த மாற்றத்தையே வலியுறுத்தினார்.

அந்த மரபை அரசியல் அடையாளமாகக் கூறிக் கொள்ளும் தாங்கள், சமூக முன்னேற்றத்தின் மையத்தை விட்டு விலகாத நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இது போன்ற உலகப் போரின் போது தமிழ்நாட்டில் மாநில அமைதியை பாதிக்கும் வகையில் தாங்கள் தெருஆர்ப்பாட்டங்கள்நடத்துவதுஅரசியல்பொறுப்புணர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இஸ்ரேல்–ஈரான் போரை முன்னிட்டு தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தும் தங்களது இது போன்ற சமூகத்திற்கு சிறிதும் பயனளிக்காது சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் தேவையற்ற ஆர்ப்பாட்டத்தை இனி வரும் நாளில் மறுபரிசீலனை செய்யுமாறு தங்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பறையர் பேரியக்கம் தலைவர் சிவகுரு பறையனார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# தென்காசியில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் ஆட்சியரிடம் மனு அளிக்கும் ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டத்தில்தமிழ்நாடுஅனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாற்று திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச குடியிருப்பு மனை அல்லது வீடு வழங்க கோரியும், ஏ ஏ ஒய் குடும்ப அட்டைக்கு மாதம் 35 கிலோ அரிசி வழங்க கோரியும், முதுகுத்தண்டு பாதிக்கப்பட்டவருக்கு தேவையான உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கவும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஆட்சியரிடம் மனு கொடுக்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில குழு உறுப்பினர் சிவகுமார் தலைமை வகித்தார்,தங்கம் இப்ராஹிம், முத்துக்குமாரசாமி, முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தின்விளக்க உரையினை மாநில துணைத்தலைவர் முருகேசன் விரிவாக எடுத்துரைத்தார்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் தென்காசிகமிட்டி உறுப்பினர்கள் அன்வர் அலி,மாசாணம்,அஜ்மீர் காஜாமைதீன்,கண்ணன், வல்லம் கமிட்டியை சேர்ந்த பூமாரி, முருகன், சுப்பையா, பாப்பான்குளம் மகாலிங்கம், மாரி, திருவேங்கடம் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கந்தசாமி ,குருசாமி,தங்கதுரை ,சாமி கண்ணு, கற்பகம், பார்வதி, பாலசுப்பிரமணியம், உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாற்றுதிறனாளிகள் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் திரளானோர் பங்கேற்றனர்.



# திருச்சியில் குழந்தைகளுக்கான பிரேத்யேக கிட்னி மாற்று சிகிச்சை மையம்

## பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழந்தைகளுக்கு உயிர்காக்கும் கிட்னி மாற்று சிகிச்சை வழங்கும் முயற்சி

ஐயோர்டா என்ற அமைப்பு,சார்பில் திருச்சியில் அமைந்துள்ள சிட்டி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான பிரேத்யேககிட்னி மாற்று சிகிச்சை மையத்தை கைட் எனும் திட்டம் மூலம் தொடங்கியுள்ளது . தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கான கிட்னி மாற்று சிகிச்சை சேவைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், இந்த முயற்சி கருதப்படுகிறது. பொருளாதார நிலைமையைப்பொருட்படுத்தாமல், மருத்துவ அவசியத்தின் அடிப்படையில் மட்டுமே குழந்தைகள் உயிர்காக்கும் சிகிச்சையைப் பெற வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் மையக் கருத்தாகும்.

இந்தத்தொடக்கவிழாவில் திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் பாலகிருஷ்ணன், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு, மையத்தைத் தொடங்கி வைத்தார். கௌரவ விருந்தினராக ராயல் பேர்ல் மருத்துவமனைகள் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜனகிராம் கலந்துகொண்டார்.

கைட் திட்டம், குழந்தைகளுக்கான கிட்னி மாற்று சிகிச்சையில் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மருத்துவ மதிப்பீடு, தானதாரர் ஆய்வு, கிட்னி மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய திட்டமிட்டகண்காணிப்பு மற்றும் பராமரிப்பு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான சிகிச்சை முறையாக இது செயல்படும்.

தொடக்க விழாவில் பேசிய பாலகிருஷ்ணன், அனைவருக்கும் சமமான சுகாதார சேவைகள் என்பது நீதியான சமூகத்தின் அடித்தளமாகும். கைட் போன்ற முயற்சிகள், உயிர்காக்கும் மருத்துவ சேவைகள் எந்தக்குழந்தைக்கும் பொருளாதார காரணங்களால் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதிப்படுத்துகின்றன. மருத்துவ அவசியத்தையே முதன்மையாகக் கொண்டு செயல்படும் இந்த முயற்சி, குழந்தை சுகாதாரத்தில் ஒரு வலுவான முன்னுதாரணமாக திகழ்கிறது என்று தெரிவித்தார். மருத்துவ அவசரத் தேவையை விளக்கி, ஐயோர்டா நிறுவனத்தின் தலைமை மாற்று சிறுநீரக நிபுணர் டாக்டர் பிரபு காஞ்சி அவர்கள் பேசுகையில், நீண்டகால சிறுநீரக நோய் என்பது இந்தியக் குழந்தைகளின் வாழ்க்கையை மெல்ல மறைவாகப் பாதித்து வரும் ஒரு பெரும் சுகாதார சவாலாக உள்ளது. ஒரு மில்லியன் குழந்தைகளில் சுமார் 49,000 குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் பலருக்கு இறுதிக்கட்ட சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலை உருவாகிறது.

சரியான நேரத்தில் சிகிச்சை கிடைக்காததால், நீண்டகால டயாலிசிஸ், உடல் மற்றும் மன வளர்ச்சி பாதிப்பு, மேலும் உயிருக்கு ஆபத்து போன்ற தீவிர விளைவுகள் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுதோறும் சுமார் 750 குழந்தைகள் புதியதாக சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்படுகின்றனர். கைட் திட்டத்தின் மூலம், ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து, கிட்னி மாற்று சிகிச்சை வழங்கி குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை மீண்டும் வழங்குவதே எங்களின் உறுதியான இலக்காகும் என்று கூறினார்.



கன்னியாகுமரி மாவட்ட வனத்துறை சார்பாக நாகர்கோவில் ஸ்ரீ ஐயப்பா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற உலக வன உயிரின தின விழாவில் விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிறப்பாக பணிபுரிந்த வன அதிகாரிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அகஸ்தீசன், வட்ட செயலாளர் இராஜேஷ் குமார் மற்றும் நிர்வாகிகள் வன அதிகாரிகள், கல்லூரி மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 73 வது பிறந்தநாள் விழா:

# வி.சி.எஸ். நகர் பகுதியில் திமுக 14 வது வட்டம் சார்பில் தூய்மைகாவலர்கள் 100 பேருக்கு மதிய உணவு வழங்கினர்



கோவை ஜி என் மில்ஸ் அருகேவிசிஎஸ்நகர்பகுதியில்தமிழகமுதல்வர்மு க ஸ்டாலினின் 73 வது பிறந்தநாளை ஒட்டி திமுக 14 வது வட்டம் சார்பில் மாநகராட்சிக்கு உட்பட்ட 14 வது வார்டில் பணிபுரியும் தூய்மைக் காவலர்கள் 100 க்கும் மேற்பட்டோருக்கு மதியம் அசைவ உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடினர்.

திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு க ஸ்டாலினின் 73 வது பிறந்தநாளை திமுகவினர் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வெகு விமர்சையாக கொண்டாடிவருகின்றனர். திமுக 14 வது வட்டம் சார்பில் கோவை ஜி என் மில்ஸ் அருகேவிசிஎஸ்நகர்பகுதியில்தமிழகமுதல்வர்மு க ஸ்டாலினின் 73 வது பிறந்தநாளை ஒட்டி மாநகராட்சிக்கு உட்பட்ட 14 வது வார்டில் பணிபுரியும் தூய்மைக்காவலர்கள் 100 க்கும் மேற்பட்டோருக்கு மதியம் அசைவ உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடினர். 14 வது வட்ட கழக செயலாளர் சோமசுந்தரம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கிழக்கு பகுதி கழக செயலாளர் அருள்குமார் தலைமை தாங்கி மதிய உணவுகளை வழங்கினார். இதில் சாப்பாடு, முட்டை, மட்டன் குழம்பு, மீன் குழம்பு, சாம்பார், புளிக்குழம்பு, ரசம், மோர், கூட்டு, பொறியல், அப்பளம், பாயசம் உள்ளிட்டவைகள் இருந்தன.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி 14 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சித்ரா தங்கவேல், வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் கேப்டன் பிரபாகரன், 13 அ வட்டக் கழக செயலாளர் குமார் என்கின்ற சண்முகசுந்தரம், மாவட்ட பிரதிநிதி பன்னீர்செல்வம், 2 ஆ வட்டக்கழகசெயலாளர்சிடி சிராஜா என்கின்ற இமயவரம்பன், மதிமுக தங்கவேல், மாநகராட்சி 14 வது வார்டு சூப்பர்வைசர் சிவகுமார் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர்.




# கலெக்டர் அழகுமீனா தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா மேம்பாட்டுகுழு கூட்டம்

கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் துறை அலுவலர்களுடன்கலந்தாய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டத்தின் சுற்றுலா தலங்கள் தமிழகத்திற்கு மட்டுமின்றி நாட்டிற்கே பெருமை சேர்ப்பதாக தெரிவித்தார்.

உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையம்

கன்னியாகுமரி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக உள்ளது. கடலின் நடுவே பாறையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், மற்றொரு பாறையில் அமைந்துள்ள திருவள்ளுவர் 133 அடி உயர சிலை, இவற்றை இணைக்கும் கண்ணாடி பாலம்,

மேலும் திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டிப்பாலம், பத்மநாபபுரம் அரண்மனை உள்ளிட்ட பல முக்கிய சுற்றுலா தலங்கள் மாவட்டத்தின் சிறப்பாக உள்ளன என்று அவர் கூறினார்.

கண்ணாடி பாலம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், நுழைவுச்சீட்டு பெற நீண்ட வரிசை நிலவி வந்தது. இதனை கருத்தில் கொண்டு, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஆன்லைன் மூலம் நுழைவுச்சீட்டு வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலா பயணிகள் ரத்து செய்யும் டிக்கெட்டுகளுக்கான பணத்தை உடனடியாக அவர்களதுவங்கிகணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்க பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

அதிகாரிகள் பங்கேற்பு

இந்த கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) ராகுல்குமார், இ.ஆ.ப., மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் பூபதி, கன்னியாகுமரி நகராட்சி ஆணையாளர் கண்மணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா

# திமுக துடியலூர் 2வது வட்டம் கிழக்கு பகுதி சார்பில் பள்ளி குழந்தைகளுக்கு கேக் வழங்கி கொண்டாடினர்



கோவை வெள்ளக்கிணர் அரசு ஆரம்பப்பள்ளியில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை ஒட்டி திமுக 2 வது வட்டம் துடியலூர் கிழக்கு பகுதி சார்பில் கேக் வெட்டி பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கியும் சிறப்பாக கொண்டாடினர். இதில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலினுக்கு பள்ளி குழந்தைகள் பிறந்தநாள் வாழ்த்து பாடல் பாடி வாழ்த்து தெரிவித்தனர்.

திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு க ஸ்டாலினின் 73 வது பிறந்தநாளை திமுகவினர் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வெகு விமர்சையாக கொண்டாடிவருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக திமுக 2 வது வட்டம் துடியலூர் கிழக்கு பகுதி சார்பில் கோவை வெள்ளக்கிணர் அரசு ஆரம்பப்பள்ளியில் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது.

கிழக்கு பகுதி கழக செயலாளர் அருள்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாநகராட்சி 2 வது வார்டு மாமன்ற உறுப்பினர் புஷ்பமணி அருள்குமார், 2 வது வட்டம் ஆ செயலாளர் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சுமார் 10 கிலோ எடையுள்ள மு க ஸ்டாலின் உருவம் பொறித்த கேக்கினை பள்ளிக் குழந்தைகளுடன் இணைந்து வெட்டி அதனை குழந்தைகளுக்கு ஊட்டினர். மேலும் பள்ளியில் பயிலும் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் தெய்வசிகாமணி, பகுதி பொருப்பு குழு ஜாபர் அலி, பொருப்பு குழு உறுப்பினர்கள் நாகராஜ், ஆறுமுக, சவுந்தர், பாஸ்கர், பி எல் ஏ 2 பார்வதி, செல்வி, ரவி, பி டி ஏ கோவிந்தராஜ், நாகராஜ், பெரியநாயகி, விஜயா, வீரமணி, முருகேசன், சார்லஸ், உதயகுமார், பி எல் சி கோமதி, தினகரன், ஆசிரியர்கள் சுமித்ரா, சுகிர்தலா, பரிமளாகலாஜோதி மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், பி எல் ஏ 2, பி எல் சி நிர்வாகிகள், பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

# 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் குற்றவாளிக்கு 20 வருடம் சிறை தண்டனை



கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். உத்தரவின்படி குழந்தைகள் மற்றும் பெண்கள் குற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்.

மதியழகன் மேற்பார்வையில் இவ்வழக்குகளின் நீதிமன்ற விசாரணை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஆற்றூர், புதுவீட்டுவிளை பகுதியை சேர்ந்த ஜெயநந்தன் என்பவரது மகன் ரதீசன் என்ற ஸ்டான்லி (36) என்ற குற்றவாளி 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததற்காக அனைத்து மகளிர் காவல் நிலையம் மார்த்தாண்டத்தில் குற்ற எண் 42/ 2018 U/S 376 IPC, 506(1) & 5(l), 6 of POCSO Act இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 20 வருடம் சிறை தண்டனை மற்றும் 5000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்கள்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

# அடகு கடை நடத்தி 75 பேரிடம் சுமார் 300 பவுன் வரை ஏமாற்றிய நபர் கைது



SAN என்ற பெயரில் நகைஅடகுகடை நடத்தி பல நபர்களிடம் நகையை திருப்பி தராமல் ஏமாற்றியதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனுக்களை அளித்திருந்தனர். அப்புகார் மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து குற்றவாளியை கைது செய்ய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்கள்

உத்தரவின்படி குளச்சல் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர். ரேகா R. நங்லட் மேற்பார்வையில் கருங்கல் காவல் ஆய்வாளர். விமலன் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கருங்கல் காவல் நிலையத்தில் 316(2), 318(4) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் குற்றவாளி முள்ளங்கினாவிளையை சார்ந்த சைலஸ் என்பவர் மகன் அகில் S விகானோ வயது 27 என்பவரை கருங்கல் போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் உலக வன உயிரின தினத்தை முன்னிட்டு,

# வன துறையின் சார்பில், தன்னார்வத்துடன் சிறப்பான சேவை செய்த 7 நபர்களுக்கு இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருதுக்கான அங்கீகார சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையினை வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (03.03.2026) அன்று உலக வன உயிரின தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வன துறையின் சார்பில் தன்னார்வத்துடன் சிறப்பான சேவை செய்த 7 நபர்களுக்கு இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருதுக்கான அங்கீகார சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையினை வழங்கினார். பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கீழ், ஏரிகள் பாதுகாப்பு, உயிரியல் பாரம்பரியத் தள அறிவிப்பு முயற்சி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக தீபக் வெங்கடாச்சலம் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவின் கீழ், உள்ளூர் இன மரக்கன்றுகள் நடுதல், பிளாஸ்டிக் ஒழிப்பு பிரச்சாரம் மற்றும் மாணவர்கள், பொதுமக்களை சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தியதற்காக கவுசல்யா அவர்களுக்கும், வனஉயிரின பாதுகாப்பு பிரிவின் கீழ், வனஉயிரின மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் உதவுதல், மனித-வனஉயிர் மோதல் குறைப்பு, சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து பறவைகள் கணக்கெடுப்பு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு இயக்கங்கள் நடத்துதல், காட்டுத்தீ தடுப்பு நடவடிக்கைகள், பழங்குடியின மக்களின் வாழ்வாதார மேம்பாடு, யானைகள் கண்காணிப்பு உதவி மற்றும் வனஉயிரின பாதுகாப்பிற்காக பொதுமக்களை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் பங்களித்ததற்காக கே.சீரங்கன், பி.மாணிக்கம், டி.சக்திவேல், சி.கண்ணப்பன் மற்றும் சி. வெள்ளையன் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகார சான்றிதழ் மற்றும் ரூ.25,000/- பரிசுத் தொகையை வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இவ்விருது, இயற்கை மற்றும் வனஉயிரின பாதுகாப்பில் தன்னார்வத்துடன் பங்களித்தசமூக முன்னோடிகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதோடு, அவர்கள் தொடர்ந்து உறுதிப்பாட்டுடன் செயல்பட ஊக்கமளிக்கும். மேலும், இளைஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரையும் இயற்கை பாதுகாப்பு பணிகளில் ஈடுபடத் தூண்டுவதாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட வன அலுவலர் (ஈரோடு வன கோட்டம் கு.வெ.அப்பால நாயுடு உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






உலக வனஉயிரின தினத்தை முன்னிட்டு வனத்துறையின் சார்பில் (03.03.2026) அன்று இயற்கை மற்றும் வனஉயிரின பாதுகாப்பு குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இஆப.., அவர்கள் சிறப்பாக சேவை புரிந்த தன்னார்வளர்களுக்கு இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருதுக்கான அங்கீகார சான்றிதழ் மற்றும் ரூ.25,000/ பரிசுத் தொகையை வழங்கி, பொன்னாடை அணிவித்து, கௌரவித்தார்.உடன் மாவட்ட வன அலுவலர் (ஈரோடு வனக்கோட்டம்) கு.வெ.அப்பால நாயுடு உள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (03.03.2026) அன்று சித்தோடு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட உணவினை சுவைத்து பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடுமாவட்டம்கோபிசெட்டிபாளையம்4வதுவார்டுகாங்கிரஸ்நிர்வாகிஹரிஹரன், அக்கட்சியிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்தார். கோபி நகரச் செயலாளர் பிரினியோ கணேஷ் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவருக்குக் கட்சித் துண்டு அணிவித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம் பவானி அண்ணாநகர் பகுதியில் முழுநேர நியாய விலைக்கடை திறப்பு விழா (மார்ச்.03) அன்று நடைபெற்றது. இதில் ஈரோடு மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் மற்றும் பவானி நகர்மன்றத் தலைவர் சிந்தூரி இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தனர். இந்நிகழ்வின் போது திமுக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

## தூத்துக்குடி பிரையன்ட் நகரில் 100 வீடுகள் கொண்ட காவலர் குடியிருப்புகளை முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாகத்திறந்து வைத்தார்



தூத்துக்குடி பிரையன்ட் நகர் பகுதியில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் (திருநெல்வேலி கோட்டம்) மூலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 10 மாடி அடுக்குமாடி காவலர் குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மொத்தம்100வீடுகளைக் கொண்ட இந்த நவீன குடியிருப்புகள், காவலர்களின் நலன் கருதி அரசு உத்தரவின் பேரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் தொடக்க விழாவைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன், புதிய குடியிருப்பில் குத்துவிளக்கேற்றி முறைப்படி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் செயற்பொறியாளர் குமரேசன், தூத்துக்குடி காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆறுமுகம், பயிற்சி காவல் உதவி கண்காணிப்பாளர் ராகுல் வி.கோபால், நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்சுனில்மற்றும்காவல் ஆய்வாளர்கள் உட்பட முக்கியப் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி

## மனநிலை பாதிக்கப்பட்டு சுற்றித்திரிந்த பெண்ணை மீட்டு அவர்களின் சொந்த ஊரான உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு அனுப்பி வைத்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (04.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மனநிலை பாதிக்கப்பட்டு சுற்றி திரிந்த பெண்ணை மீட்டு அவர்களின் சொந்த ஊரான உத்தரப்பிரதேச மாநிலத்திற்குஅனுப்பிவைத்தார்.

தகவல் கிடைத்த உடனே மீட்பு குழுவினர் அந்த இடத்திற்கு சென்றனர். ஆரம்பத்தில் நிஷுரதோர் எவரிடமும் ஒத்துழைக்கவில்லை. பயம், சந்தேகம் ஆகியவை அவரின் நடத்தில் தென்பட்டது. ஆனால் குழுவினர் பொறுமையுடன், அன்புடன் அணுகி நம்பிக்கை ஏற்படுத்தினர். மெதுவாக அவர் அவர்களை ஏற்றுக்கொண்டு உதவியை ஒப்புக்கொண்டார். மீட்புக்குப் பிறகு அவருக்கு குளியல் செய்து, தலைமுடி சுத்தம்செய்து. புதிய ஆடைகள் வழங்கப்பட்டன. பின்னர் ECRC மனநல அனுமதிக்கப்பட்டார். ஆரம்ப நாட்களில் அவர் தனிமையாக இருந்தார். யாருடனும் பேசவில்லை. ஆனால் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை, மருந்து சத்தான உணவு மற்றும் ஆலோசனை ஆதரவு வழங்கப்பட்டதன் மூலம் அவரது மனநிலை மெதுவாக மேம்பட்டது.

காலப்போக்கில் அவர் மற்றவர்களுடன் பேச ஆரம்பித்தார். நண்பர்களாக பழகத் தொடங்கினார்.பலநாட்கள்கழித்து தான் தன் குடும்பத்தைப் பற்றிய தகவல்களை பகிர்ந்துகொண்டார். அவருடைய சொந்த ஊர் உத்தரப்பிரதேச மாநிலம், ஃபருக்காபாத் மாவட்டம், சக்குவாய் (Sakwai, Farrukhabad, Uttar Pradesh) என்று தெரிவித்தார்.அவரதுதந்தைஅரசு அதிகாரி என்றும். தாய் ஆசிரியர் என்றும் கூறினார்.அவருக்கு இரண்டு மகன்கள் மற்றும்மூன்று சகோதரிகள் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மொழி தடைகள் மற்றும் தூரம் காரணமாக குடும்பத்தை கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக இருந்தது.இருந்தாலும் அட்சயம் அறக்கட்டளை குழுவினர் சமூக ஊடகங்கள் மற்றும் தொடர்புகள் மூலம் தொடர்ந்து முயற்சிசெய்தனர்.நீண்ட கால முயற்சிக்குப் பிறகு இறுதியாக அவரது குடும்பத்தை கண்டுபிடிக்க முடிந்தது. அவரது தாயாருடன் தொடர்பு கொண்டபோது, நிஷுராதோர் ஒரு ஆண்டாக காணாமல் போயிருந்தார் என்றும், அவர்கள் போலீசில் காணாமல் போனவர்கள் குறித்த புகார் அளித்திருந்தனர் என்றும் தெரிவித்தார். வயதான பெற்றோர் மிகுந்த கவலையுடன் அவரைக் தேடி வந்தனர். தொலைபேசியில் மகள் இருப்பிடம் உறுதி செய்யப்பட்ட அந்த தருணம் மிகவும் உணர்ச்சிகரமான மற்றும் மனதை நெகிழவைக்கும் தருணமாக இருந்தது.தாயாரின் கண்ணீர், நன்றியுணர்வு. மகிழ்ச்சி அனைத்தும் அந்த உரையாடலில் வெளிப்பட்டது. தன் குடும்பம் கண்டுபிடிக்கப்பட்டது என்ற செய்தி நிஷுராதோருக்கு தெரிவித்தபோது. அவர் அளவிட முடியாத மகிழ்ச்சி அடைந்தார். ஒரு வருடம் பிரிந்திருந்த தனது பெற்றோர்மற்றும்குழந்தைகளை மீண்டும் சந்திக்கப் போகிறார் என்ற எண்ணம் அவருக்கு புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும்அளித்தது. தற்போது அவர் நிலையான மனநிலையில் உள்ளார். குடும்பத்துடன் பாதுகாப்பாக மீண்டும் இணைக்க (Reintegration) தேவையான நடவடிக்கைகள் அட்சயம் அறக்கட்டளையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. நிஷுராதோரின் இந்த பயணம், பொறுமையாலும், அக்கறையாலும் ஒரு வாழ்க்கையை மீண்டும் குடும்பத்துடன் இணைக்க முடியும் என்பதற்கான மிக சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த நிஷுரா தோருக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் அட்சயம் அறக்கட்டளை மூலம் உரிய சிகிச்சை மற்றும் பாதுகாப்பு வழங்கியதைத் தொடர்ந்து தற்போது நிலையான மனநிலையில் உள்ள அவரை அவர்களது குடும்பத்தாருடன் இணைக்க வழியனுப்பி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, அட்சயம் அறக்கட்டளை நிறுவனர் நவீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாநகராட்சியில் கலெக்டர் ச.கந்தசாமி

## அடிப்படை வசதிகளுடன் கூடிய உழைப்பாளர் நலக்கூடத்தினை கட்டுமான தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்



ஈரோடு மாவட்டத்தில் ஒரு அடிப்படை வசதி மையம் அமைக்க உத்தரவின்படி, ஈரோடு மாவட்டத்தில் நிறுவப்பட்ட அடிப்படை வசதி மையமானது இன்றுதுவக்கிவைக்கப்பட்டு கட்டுமானத் தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

உழைப்பாளர் நலக்கூடத்தில், மின் விளக்கு மற்றும் மின்விசிறி வசதிகள், குடிநீர் வசதி, இருக்கை வசதி போன்ற வசதிகளில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உழைப்பாளர் நலக்கூடமானது காலை 7 மணி முதல் 11 மணி வரை பயன்பாட்டில் இருக்கும். இந்த நலக்கூடத்தில் இணையதள சேவை மடிக்கணிணியோடு ஒருகணினி இயக்குபவர், பணியில் இருப்பார். இந்த நலக்கூடத்தினை அன்றாட கட்டுமானப்பணிக்குசெல்லும்தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீட்டு ஆணையினை 2 பயனாளிகளுக்கும் தலா ரூ.1,90,000/- வீதம் ரூ.3,80,000/-கட்டுமானத்தொழிலாளர்களின் 2 வாரிசுத்தாரர்களுக்கு மதிப்பீட்டிலும்,5.5,000/-5 தொழிலாளர்கள் 4 5.10,000/-தலா திருமண உதவித்தொகையும், கட்டுமான வாரிசுதாரர்களுக்கு ரூ.14,500/- மதிப்பிலான கல்வி உதவித்தொகை என மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.2,33,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சிகளின்போது, ஈரோடு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சிமேயர்,நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி துணைமேயர்,வே.செல்வராஜ், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) கோ.ஜெயலட்சுமி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சியில் சுற்றுச்சூழல் விதிகளுக்கு மாறாக இளையான்குடி பெரிய கண்மாய்க்கு செல்லும் கால்வாய் அருகில் குப்பை கிடங்கு அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கொ.இடையவலசை, அ.மெய்யனேந்தல், நகரகுடி உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த கிராம மற்றும் விவசாய பொதுமக்கள் 300க்கும் மேற்பட்டோர் ஸ்ரீ தடியார் உடையார் அய்யனார் திருக்கோவில் அருகில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டத்தை தொடர்ந்து சமூக பாதுகாப்புத் திட்ட தாசில்தார், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் இளையாங்குடி பேரூராட்சி செயல் அலுவலர் உள்ளிட்டோரிடம் பேச்சுவார்த்தை நிறைவடைந்த நிலையில், தங்களின் கோரிக்கையை ஏற்று எழுத்துப்பூர்வமாக அறிவிக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாய பெருமக்கள் தெரிவித்துள்ளார். மேலும் போராட்டம் நடக்கும் இடத்திலேயே விவசாய பெருமக்கள் உணவுகளையும் தயாரித்து வருகின்றனர்.







தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ஈரோடு மாவட்ட இளைஞரணி சார்பில் வணிகர் பட்டிமன்றம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.லாரன்ஸ் ரமேஷ் தலைமையில் (03.03.2026) அன்று நடைபெற்றது. வணிகத்திற்கு தேவை நேர்மையா விளம்பரமா என்ற தலைப்பில் இளைஞர் அணியினர் இரு அணிகளாக பிரிந்து தங்களது கருத்துக்களை நகைச்சுவை உடன்கூடிய எதார்த்தமான எடுத்துக்காட்டுகளோடு முன் வைத்தனர். மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளரும் ஈரோடு மாவட்ட தலைவருமான இரா.க.சண்முகவேல் பட்டிமன்ற நடுவராகஇருந்துபல்வேறுவணிகம்சார்ந்தகருத்துக்களை பகிர்ந்தார்.மாநில துணைத் தலைவர் ப.திருமூர்த்தி, மாவட்ட பொருளாளர் உதயம் பொ.செல்வம், மாவட்ட துணைத் தலைவர்கள் சேரன் எஸ்.சரவணன், நெல்லை ஏ.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் பீ.மாதேஸ்வரன், மாநகர செயலாளர் கே.பாலமுருகன், மாநகர பொருளாளர் ஜி.கமலஹாசன், மாநகர துணைத் தலைவர் எம். குழந்தைசாமி ஆகியோர் இளைஞரணியின் புதிய முயற்சிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். முன்னதாக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பீ.ரியாஷ் அகமது வரவேற்புரை ஆற்ற இறுதியில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சி.தங்கராஜ் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளைஞரணி நிர்வாகிகள் கி.ஞானசேகர் மற்றும் இர.தீபக் சிறப்பாக செய்திருந்தனர். பட்டிமன்ற பேச்சாளர்கள் அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.